


முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் 27.2.2024 அன்று தலைமைச் செயலகத்தில், நீர்வளத்துறை சார்பில் சிவகங்கை மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் 111 கோடியே 35 இலட்சம் ரூபாய் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள பாசன கட்டமைப்புகள் மற்றும் வெள்ளத் தடுப்புப் பணிகள், திருச்சிராப்பள்ளி மாவட்டம், முக்கொம்பில், கொள்ளிடம் ஆற்றில் 414 கோடி ரூபாய் செலவில் புதிதாக கட்டி முடிக்கப்பட்டுள்ள நீரொழுங்கி ஆகியவற்றை பொதுமக்களின் பயன்பாட்டிற்காக காணொலிக் காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார். மேலும், அதீத கனமழையால் பாதிக்கப்பட்ட 6 தென் மாவட்டங்கள் மற்றும் மிக்ஜாம் புயல் மற்றும் மழையால் பாதிக்கப்பட்ட 4 மாவட்டங்களில் 726.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 503 நிரந்தர சீரமைப்பு, வெள்ளத் தணிப்பு மற்றும் வெள்ளத்தடுப்பு பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, தமிழ்நாட்டின் 24 மாவட்டங்களில் 115 கோடி ரூபாய் செலவில் 5814.295 கி.மீ. நீளத்திற்கு 1004 சிறப்பு தூர்வாரும் பணிகளை தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில், நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன், தலைமைச் செயலாளர் சிவ் தாஸ் மீனா, நீர்வளத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் சந்தீப் சக்சேனா, தமிழ்நாடு பாசன வேளாண்மை நவீனமயமாக்கல் திட்ட இயக்குநர் / கூடுதல் தலைமைச் செயலாளர் தென்காசி சு. ஜவகர், நீர்வளத் துறை முதன்மைத் தலைமைப் பொறியாளர் அ.முத்தையா ஆகியோர் கலந்து கொண்டனர்.

### சைதை 172 வது வார்டில் ரூபாய் 16 லட்சம் மதிப்பீட்டில்

# சமூக நலக்கூடம் திறந்து 2301 நபர்களுக்கு காப்பீட்டு அட்டைகள் : அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்!

## இரா.துரைராஜ் வேண்டுகோள்!

சென்னை, பிப். 29 -

சைதை 172-வது வார்டில்டி ரூ.16 லட்சம் மதிப்பிலான சமூக நலக் கூடத்தைஅமைச்சர் மா.சுப் பிரமணியன் இன்று திறந்து வைத்து விரிவான காப்பீட்டு அட்டை வழங்குகிறார். இது குறித்து சைதை கிழக்குப் பகுதிக் கழகத்தினருக்கு பகுதிச் செயலா ளர் இரா.துரைராஜ் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-

சைதை கிழக்குப் பகுதி 172வது வார்டு கிண்டி சக்கரபாணி சாலை யில் ரூ , 16 லட்சம் மதிப்பீட்டில் புதுப்பிக்கப்பட்ட சமூக நலக்கூ டத்தை திறந்து வைத்து 10-09-2023 ல் சைதை கிழக்கு பகுதி யில் உள்ள 168, 169, 170, 172 ஆகிய வார்டுகளில் நடைபெற்ற முகாம்களில் பதிவு செய்துள்ள 2301 பயனாளிகளுக்கு முதல மைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்ட அட்டைகளை இன்று (29.02.2024) காலை 10.00 மணிக்கு சக்கரபாணி ரோடு, சமூக நலக்கூடத்தில் நடைபெறும் விழாவில்

அமைச்சர் மா.சுப்பிரமணியன் புதுப்பிக்கப்பட்ட சமூக நலக்கூ டத்தை திறந்து வைத்து காப்பீடு அட்டைகளை வழங்குகிறார்கள்

எனவே நமது சைதை கிழக்கு பகுதியில் உள்ள வட்ட கழக செய லாளர்கள், மற்றும் கழக நிர்வாகிகள் விழாவில் கலந்து கொள்வதோடு பதிவு செய்துள்ள காப்பீடு திட்ட பயனாளிகளை கண் டறிந்து விழாவில் பங்கேற்க செய்து மருத்துவ காப்பீடு அட்டை பெற உதவிடுமாறு பகுதிச் செய லாளர் இரா.துரைராஜ் கேட்டுக் கொண்டுள்ளார்.

# ‘திராவிட மாடல்’ நாயகரின் பிறந்த நாள் விழா பொதுக் கூட்டங்கள்!

## தலைமைக் கழக அறிவிப்பு!... முதல் பக்கத் தொடர்ச்சி

| | |
|---|---|
| பெரம்பலூர் நகரம் | நெல்லிக்குப்பம் புகழேந்தி |
| திருவேற்காடு நகரம் | மனுஷ்யபுத்திரன் |
| திருத்தணி நகரம் | கோவி. லெனின் |
| கிருஷ்ணகிரி நகரம் | காசிமுத்து மாணிக்கம் |
| புஞ்சை புளியம்பட்டி நகரம் | சேலம் சுஜாதா |
| மதுக்கரை நகரம் | ஈரோடு இறைவன் |
| வாணியம்பாடி நகரம் | கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் |
| புளியங்குடி நகரம் | முனைவர்சபாபதிமோகன் |
| போடிநாயக்கனூர் நகரம் | மதுரை எஸ். பாலா |
| அருப்புக்கோட்டை நகரம் | பவானி ராஜேந்திரன் |
| கரூர் மாநகரம் | சிவாஜி கிருஷ்ணமூர்த்தி |
| விருதுநகர் நகரம் | சைதை சாதிக் |
| துவாக்குடி நகரம் | கா.அமுதரசன் |
| நெல்லிக்குப்பம் நகரம் | சூர்யா கிருஷ்ணமூர்த்தி |
| இடங்கணசாலை நகரம் | கோவைசெல்வராஜ் |
| வெள்ளக்கோவில் நகரம் | வி.சி.சந்திரகுமார் |
| அரியலூர் நகரம் | கடலூர் இள. புகழேந்தி |
| திருவாரூர் நகரம் | கவிச்சுடர் கவிதைப்பித்தன் |
| பெரியகுளம் நகரம் | வி.பி. இராசன் |
| கூடலூர் (தேனி) நகரம் | தமிழரசி |
| திருச்செங்கோடு நகரம் | சித்திக் |

**நாள்: 03.03.2024 (ஞாயிற்றுக்கிழமை)**

| இடம் | | சிறப்புரை |
|---|---|---|
| திருமங்கலம் நகரம் | | மாண்புமிகு கே.என்.நேரு |
| கோயம்புத்தூர் மாநகரம் | | ஆ. ராசா |
| கடலூர் மாநகரம் | | ஆர்.எஸ். பாரதி |
| நாகப்பட்டினம் நகரம் | | மாண்புமிகு எ.வ.வேலு |
| காஞ்சிபுரம் மாநகரம் | | மாண்புமிகு மா.சுப்பிரமணியன் |
| இலால்குடி நகரம் | | திரு.ஜெயரஞ்சன் |
| சங்கரன்கோவில் நகரம் | | பொன். முத்துராமலிங்கம் |
| மேலூர் நகரம் | | திருச்சி சிவா |
| சிவகாசி மாநகரம் | | தயாநிதி மாறன் |
| கும்பகோணம் மாநகரம் | | டி.கே.எஸ். இளங்கோவன் |
| ஓசூர் மாநகரம் | | மாண்புமிகு கோவி. செழியன் |
| ஆம்பூர் நகரம் | | திப்பம்பட்டி ஆறுச்சாமி |
| பத்மநாபபுரம் நகரம் | | முனைவர் சபாபதி மோகன் |
| கோவில்பட்டி நகரம் | | நாஞ்சில் சம்பத் |
| திட்டக்குடி நகரம் | | ஆரணி மாலா |
| சாத்தூர் நகரம் | | கந்திலி கரிகாலன் |
| குடியாத்தம் நகரம் | | தருண் விஸ்வநாதன் |
| அறந்தாங்கி நகரம் | | மருத்துவர் எழிலன் நாகநாதன் |
| பள்ளிபாளையம் நகரம் | | மாண்புமிகு எஸ்.எஸ்.சிவசங்கர் |
| களக்காடு நகரம் | | சூர்யா சேவியர் |
| ஜெயங்கொண்டம் நகரம் | | சல்மா |
| நெல்லியாளம் நகரம் | : | ஆர். மகேந்திரன் |
| குன்றத்தூர் நகரம் | : | மனுஷ்யபுத்திரன் |
| நந்திவரம் - கூடுவாஞ்சேரிநகரம் | : | கோவி. லெனின் |
| திருவள்ளூர் நகரம் | : | வாகை சந்திரசேகர் |
| வந்தவாசி நகரம் | : | திருமதி.பத்மபிரியா |
| ராசிபுரம் நகரம் | : | ஈரோடு இறைவன் |
| காங்கேயம் நகரம் | : | கரூர் முரளி |
| மேல்விஷாரம் நகரம் | : | கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் |
| கீழக்கரை நகரம் | : | திருமதி. புதுக்கோட்டை விஜயா |
| செங்கோட்டை நகரம் | : | திருமதி. ஆண்டாள் பிரியதர்ஷினி |
| பொன்னேரி நகரம் | : | வி.பி. கலைராஜன் |
| உதகை நகரம் | : | சிவ. ஜெயராஜ் |
| சத்தியமங்கலம் நகரம் | : | பொள்ளாச்சி மா.உமாபதி |
| நரசிங்கபுரம் நகரம் | : | தக்கோலம் தேவபாலன் |
| பழனி நகரம் | : | கு. கருணாநிதி |
| மதுராந்தகம் நகரம் | : | தமிழன் பிரசன்னா |
| திருக்கோயிலூர்நகரம் | : | சூர்யாவெற்றிகொண்டான் |
| தென்காசி நகரம் | : | சைதை சாதிக் |
| மன்னார்குடி நகரம் | : | கா.அமுதரசன் |
| மேட்டூர் நகரம் | : | சி.வி.எம்.பி. எழிலரசன் |
| சின்னமனூர் நகரம் | : | கம்பம் பெ.செல்வேந்திரன் |
| இராஜபாளையம் நகரம் | : | இரா. ராஜீவ்காந்தி |
| திருநின்றவூர் நகரம் | : | இ.பரந்தாமன் |
| சோளிங்கர் நகரம் | : | ஆ. கிருஷ்ணசாமி |
| திண்டிவனம் நகரம் | : | சூர்யா கிருஷ்ணமூர்த்தி |
| தாராபுரம் நகரம் | : | டான் அசோக் |
| மேட்டுப்பாளையம் நகரம் | : | வி.சி.சந்திரகுமார் |
| கூத்தாநல்லூர் நகரம் | : | கடலூர் இள. புகழேந்தி |
| துறையூர் நகரம் | : | கவிச்சுடர் கவிதைப்பித்தன் |
| தேவகோட்டை நகரம் | : | சௌமியன் |
| காயல்பட்டணம் நகரம் | : | திருமதி. தமிழரசி |
| காரமடை நகரம் | : | ஊடகவியலாளர் செந்தில்வேல் |
| மணப்பாறை நகரம் | : | சிவாஜி கிருஷ்ணமூர்த்தி |

**நாள்: 04.03.2024 (திங்கட்கிழமை)**

| இடம் | | சிறப்புரை |
|---|---|---|
| செங்கல்பட்டு நகரம் | : | கழகப்பொதுச் செயலாளர் **துரைமுருகன்** எஸ்.ஜெகத்ரட்சகன் |
| திருநெல்வேலி மாநகரம் | : | மாண்புமிகு ஐ. பெரியசாமி |
| புகளூர் நகரம் | : | அந்தியூர் செல்வராஜ் |
| ஈரோடு மாநகரம் | : | திருமதி. கனிமொழி கருணாநிதி |
| நெய்வேலி நகரம் | : | ஆர்.எஸ். பாரதி |
| குளச்சல் நகரம் | : | மாண்புமிகு எஸ். இரகுபதி |
| சிவகங்கை நகரம் | : | மாண்புமிகு அன்பில் மகேஸ் பொய்யாமொழி |
| புதுக்கோட்டை நகரம் | : | மாண்புமிகு டி.ஆர்.பி. ராஜா |
| விழுப்புரம் நகரம் | : | டி.கே.எஸ். இளங்கோவன் |
| தாம்பரம் மாநகரம் | : | திருச்சி சிவா |
| திருப்பத்தூர் நகரம் | : | மாண்புமிகு கோவி. செழியன் |
| தேனி நகரம் | : | பொன். முத்துராமலிங்கம் |
| திருச்சி மாநகரம் | : | பேராசிரியர் சுப.வீ. |
| புதுக்கோட்டை நகரம் | : | திரு.ஜெயரஞ்சன் |
| திருச்செந்தூர் நகரம் | : | தாயகம் கவி |
| மயிலாடுதுறை நகரம் | : | ஏ.கே.எஸ். விஜயன் |
| பூவிருந்தவல்லி நகரம் | : | திருமதி. தமிழச்சி தங்கபாண்டியன் |
| கருமத்தம்பட்டி நகரம் | : | பவானி கண்ணன் |
| திருத்துறைப்பூண்டி நகரம் | : | குத்தாலம் பி. கல்யாணம் |
| வடலூர் நகரம் | : | திருமதி. சல்மா |
| கள்ளக்குறிச்சி நகரம் | : | நெல்லிக்குப்பம் புகழேந்தி |
| வாலாஜாபேட்டை நகரம் | : | சிவ. ஜெயராஜ் |
| தருமபுரிநகரம் | : | காசிமுத்து மாணிக்கம் |
| வால்பாறை நகரம் | : | திருமதி. சேலம் சுஜாதா |
| தாரமங்கலம் நகரம் | : | கரூர் முரளி |
| சீர்காழி நகரம் | : | திருமதி. புதுக்கோட்டை விஜயா |
| திருவில்லிப்புத்தூர் நகரம் | : | திருமதி. ஆண்டாள் பிரியதர்ஷினி |
| ஆரணி நகரம் | : | வி.பி. கலைராஜன் |
| கம்பம் நகரம் | : | வே.மதிமாறன் |
| குமாரப்பாளையம்நகரம் | : | திருமதி. ஜெ. ரேகா பிரியதர்ஷினி |
| பல்லடம் நகரம் | : | தக்கோலம் தேவபாலன் |
| காரைக்குடி நகரம் | : | சென்னை அரங்கநாதன் |
| உடுமலைப்பேட்டை நகரம் | : | கு. கருணாநிதி |
| அம்பாசமுத்திரம் நகரம் | : | மதுரை எஸ். பாலா |
| கொல்லங்கோடு நகரம் | : | திருமதி. பவானி ராஜேந்திரன் |
| ஆவடி மாநகரம் | : | திண்டுக்கல் ஐ. லியோனி |
| பவானி நகரம் | : | ஒப்பிலாமணி, பொன்னேரி சிவா |
| கடையநல்லூர் நகரம் | : | நாஞ்சில் சம்பத் |
| அரக்கோணம் நகரம் | : | தமிழன் பிரசன்னா |
| ஆத்தூர் நகரம் | : | சூர்யாவெற்றிகொண்டான் |
| இராமேஸ்வரம் நகரம் | : | சைதை சாதிக் |
| பட்டுக்கோட்டை நகரம் | : | கா.அமுதரசன் |
| திருப்பூர் மாநகரம் | : | சி.வி.எம்.பி. எழிலரசன் |
| உசிலம்பட்டி நகரம் | : | கம்பம் பெ.செல்வேந்திரன் |
| தூத்துக்குடி மாநகரம் | : | இரா. ராஜீவ்காந்தி |
| கண்டோண்மெண்ட் நகரம் | : | இ.பரந்தாமன் |
| கோட்டகுப்பம் நகரம் | : | ஆ. கிருஷ்ணசாமி |
| ஜோலார்பேட்டை நகரம் | : | சூர்யா கிருஷ்ணமூர்த்தி |
| கூடலூர்நகரம்(கோவை) | : | கோவை செல்வராஜ் |
| கூடலூர் நகரம் (நீலகிரி) | : | வி.சி.சந்திரகுமார் |
| முசிறி நகரம் | : | கடலூர் இள. புகழேந்தி |
| பள்ளப்பட்டி நகரம் | : | கவிச்சுடர் கவிதைப்பித்தன் |
| பரமக்குடி நகரம் | : | வி.பி. இராசன் |
| குழித்துறை நகரம் | : | சௌமியன் |
| குன்னூர் நகரம் | : | சித்திக் |
| பொள்ளாச்சி நகரம் | : | சிவாஜி கிருஷ்ணமூர்த்தி |

இவ்வாறு தலைமைக் கழகம் அறிவித்துள்ளது.

## டி.ஆர்.பாலு எச்சரிக்கை... முதல் பக்கத் தொடர்ச்சி

50 காசு செலவில் இந்தியா முழுவதும் தொலைபேசியில் பேசும் வசதி என ஒன் பதாண்டு காலத்தில் தமிழ்நாட்டுக்கு மட் டுமல்ல, இந்தியா முழுமைக்கும் பல திட்டங்களைத் தி.மு.க கொண்டு வந்தது.

இத்தகைய சிறப்புத் திட்டம் ஏதாவது தமிழ்நாட்டுக்கு பா.ஜ.க அரசு கொண்டு வந்ததாகப் பட்டியல் போட முடியுமா? ஒரே ஒரு எய்ம்ஸ் மருத்துவமனை 2015 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்டது. 2019 ஆம் ஆண்டு பிரதமர் மோடியால் ஒரு செங்கல் வைக்கப்பட்டது. மறு செங்கல் இதுவரை வைக்கப்படவில்லை. 2024 மே மாதத்துக்குப் பிறகு பதவியேற்கும் புதிய பிரதமர்தான் மதுரை எய்ம்ஸ் மருத்துவமனையைக் கட்டப் போகிறார். வீட்டில் இருந்தபடி மோடி அதனைப் பார்க்கப் போகிறார். மதுரையில் ஒரே ஒரு எய்ம்ஸ் கூட திறக்க முடியாத உங்க ளால் மதுரைக்கு எப்படி வர முடிகிறது? கூச்சமாக இல்லையா?

### கூச்சமே இன்றி மோடி வருகை!

பேரிடர் நிவாரண நிதியில் இருந்து ஒரு பைசாவைக்கூடத் தமிழ்நாட்டிற்குத் தரவில்லை. வெள்ளம் பாதித்த தூத்துக்குடிக்கும் திருநெல்வேலிக்கும் வெறும் கையோடு வந்து முழம் போடுகி றார்கள். வெள்ளம் பாதித்த பகுதியை மேம்படுத்த 37 ஆயிரம் கோடி நிதி கேட் டோம். அதில் கொஞ்சம் கூட தரவில்லை. தர மறுத்த நீங்கள் அது பற்றிய கூச்சமே இல்லாமல் தூத்துக்குடிக்கும் திருநெல் வேலிக்கும் எப்படி வருகிறீர்கள்?

தமிழ்நாடு கொடுக்கும் ஒரு ரூபாய்க்கு வெறும் 29 பைசா மட்டுமே வழங்குகிறது ஒன்றிய அரசு. ’29 பைசா மோடி’ தமிழ்நாட்டுக்குக் கொடுத்தது என்ன? சில திருக்குறள்களும் பாரதியார் கவிதைகளும் மட்டும்தானே!

நெல்லையில் ‘அல்வா’வை நினை வூட்டி இருக்கிறீர்கள். பேரிடர் நிதியைக் கூட தராமல் ’அல்வா’ கொடுக்கும் மோடி ஆட்சிக்கு இந்தத் தேர்தலில் தமிழ்நாட்டு மக்கள் நிச்சயம் ‘அல்வா’ கொடுப்பார்கள்.

இந்தியாவின் முன்னேற்றத்தைப் பேசுவதைவிட, ‘இந்தியா’ கூட்டணியின் முன்னேற்றத்தைக் கண்டு தாங்க முடியாமல் மணிக்கொரு முறை இந்தியா கூட்டணிக் கட்சிகளையும் அதன் தலைவர்களையும் விமர்சித்துக் கொண்டிருக்கிறார்.

“என்னுடைய சாதனைகளை அச்சி டவிடாமல் நாளிதழ்களைத் தமிழ்நாட் டில் உள்ள தி.மு.க அரசு தடுக்கிறது. மக் களிடம் சென்று அடையாமல் தொலைக்காட்சிகளையும் தமிழ்நாடு அரசு கட்டுப்படுத்துகிறது” எனப் பேசியி ருக்கிறார் பிரதமர் மோடி. காலை, மாலை பேப்பர்களைப் படிக்கக்கூட உங் களுக்கு நேரமில்லையா பிரதமரே! அந்த தினசரிகளைக் கொஞ்சம் புரட்டி பாருங்கள். எல்லாத் தலைப்பு செய்திகளி லும் நீக்கமற நீங்கள்தான் நிரம்பி யிருக் கிறீர்கள். நேரலை, விவாதங்கள், விறு விறு செய்திகள், சிறப்புச் செய்திகள் எனத் தொலைக்காட்சிகள் முழுவதும் மோடி பற்றிய செய்திகளைத்தான் இரண்டு நாளும் வாசித்தன.

### ஹிட்லராகவும் கோயபல்சாகவும் மோடி!

“நாளிதழ்களை, தொலைக்காட்சிக ளைத் திமுக கட்டுப்படுத்துகிறது” என எப் படி வாய் கூசாமல் சொல்கிறீர்கள். பொய் களை சொல்லவும் ஏமாற்றத்தைத் தூண்டவும்தான் பிரதமருக்கு அதிகாரம் தரப்படுகிறதா? மாநிலங்களை ஒடுக்குவ தில் ஹிட்லராகவும், பொய்களைப் புனை வதில் கோயபல்ஸாகவும் என இரண்டு மாகவே ஆகிவிட்டார் அவர்.

”தமிழ்நாட்டைச் சேர்ந்த முருகனை ஒன்றிய அமைச்சராக்கி உள்ளோம்” எனப் பெருமைப்பட்டிருக்கிறார் பிரதமர் மோடி. காங்கிரஸ் தலைமையில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு ஒன்றியத் தில் இருந்தபோது தமிழ்நாட்டைச் சேர்ந்த நான், தயாநிதி மாறன், ஆ. இராசா, மு.க.அழகிரி, ப.சிதம்பரம், அன் புமணி, பழனிமாணிக்கம், ஜி.கே. வாசன், நெப்போலியன், மணிசங்கர் அய்யர், அர.வேலு, ஈ.வி.கே.எஸ். இளங்கோவன், வேங்கடபதி, சுப்புலட்சுமி ஜெகதீசன், ரகுபதி என எவ் வளவு பேர் அமைச்சர்களாக இருந்தார் கள் என எண்ணிப் பாருங்கள்.

### பொய் சொல்லும் மோடி!

இணை அமைச்சர் பொறுப்பில் முரு கனை நியமித்துவிட்டு, பெருமை அடிக் காதீர்கள். ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசில் கேபினேட் அமைச்சர்களாகத் தமிழ்நாட்டைச் சேர்ந்த நான் உட்படப் பலர் நியமிக்கப்பட்டனர். அந்த வர லாற்றை எல்லாம் மறந்துவிட்டுப் பேசியி ருக்கிறார் மோடி.

“மத்திய அரசுக்கு ஒத்துழைப்பு தராத ஆட்சி தமிழ்நாட்டில் நடந்து கொண்டிருக் கிறது” என்கிற பொய்யைச் சொல்லியிருக் கிறார் பிரதமர் மோடி. ஜி.எஸ்.டி நிதி முதல் பேரிடர் நிதி வரை தராத ஒன்றிய அரசின் ஏமாற்று வேலையைத் திமுக தோலுரிப்பதால் ”ஒன்றிய அரசுக்கு ஒத் துழைப்பு தராத ஆட்சி தமிழ்நாட்டில் நடந்து கொண்டிருக்கிறது” எனப் பொய் யைச் சொல்லியிருக்கிறார்.

எய்ம்ஸ் மருத்துவமனை அமைக்க இடம் கொடுத்தது தமிழ்நாடு அரசுதான். அமைக்காமல் ஏமாற்றியது யார்? மெட்ரோ இரண்டாம் கட்டப் பணிகளுக்கு அனுமதி கொடுக்காமலும், நிதி கொடுக்கா மலும் ஏமாற்றுவது யார்?

திமுக ஒன்றிய அரசில் அங்கம் வகித் தபோது தமிழ்நாட்டில் கலைஞர் ஆட்சி நடைபெற்ற நேரத்தில்தான் 1,650 கோடி ரூபாய்ச் செலவில் சென்னை துறைமு கம் மதுரவாயல் இடையே பறக்கும் சாலைத் திட்டத்திற்கு அடிக்கல் நாட்டப்பட் டது. ஜெயலலிதா ஆட்சிக்கு வந்த பிறகு அந்தத் திட்டத்தை முடக்கினார். மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசு அமைந்த பிறகு அந்தத் திட்டத்தை நிறைவேற்ற முயற்சிகள் எடுத்துப் பணிகள் இப்போது நடந்து வருகின்றன. அத்தகைய தி.மு.க அரசின் மீதுதான் ”ஒன்றிய அரசுக்கு ஒத் துழைப்பு தராத ஆட்சி தமிழ்நாட்டில் நடந்து கொண்டிருக்கிறது” எனச் சொல் லியிருக்கிறார் பிரதமர் மோடி.

### வரலாற்றில் நிமிர்ந்து நிற்கும் தி.மு.க. எனும் இமயமலை!

“தி.மு.க.வை இனிப் பார்க்க முடி யாது. இனித் திமுக எங்குத் தேடினாலும் கிடைக்காது” எனச் சொல்லியிருக்கிறார் பிரதமர் மோடி. ”திமுக அழிந்து போகும். தலைதூக்காது” என திமுக உருவான 1949ஆம் ஆண்டில் இருந்து இன்று வரை 74 ஆண்டு காலமாகப் பலர் பேசிக் கடந்து சென்று கொண்டுதான் இருக்கி றார்கள். ஆனால், தி.மு.க என்ற இமய மலை இன்றும் வரலாற்றில் நிமிர்ந்து நின்று கொண்டுதான் இருக்கிறது.

தி.மு.க.வையே இல்லாமல் ஆக்கிவி டுவாராம். சவால் விட்டுள்ளார். இப்படிச் சொன்னவர்கள் எல்லாம் வரலாற்றில் காணாமல் போய்விட்டார்கள். அந்த வரி சையில் அவரும் விரைவில் இணைந்து விடத்தான் போகிறார் என்று எச்சரிக் கிறேன்.

இவ்வாறு கழகப் பொருளாளர் டி.ஆர்.பாலு அவர்கள் தமது அறிக்கை யில் தெரிவித்துள்ளார்.